# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.252/2018

சாட்சி : PW–1
பெயர் : திரு. நடராஜன் தேதி : 09.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**கூடுதல் குறுக்குவிசாரணை**:– ( 2 மற்றும் 3 ம்பிரதிவாதிகள் தரப்பில்)

வா.சா.ஆ.33 ஆவணத்தில் குழந்தை பிறந்த இடம் 486, திருச்சி மெயின் ரோடு என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தந்தையின் பெயர் கந்தசாமி என்றுள்ளது என்றால் சரிதான். தாயின் பெயர் தனம் என்றுள்ளது என்றால் சரிதான். தாய் மற்றும் தந்தையினரின் நிலையான வீட்டு முகவரி என்பதில் எந்தவொரு விலாசமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். குழந்தை பிறப்பின் தாய் தந்தையினரின் முகவரி என்பதில் விலாசம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–3 பிறப்பு சான்றிதழுக்கும், இவ்வழக்கின் இரண்டாம் வாதி சக்திவேலுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே 2 ம் பிரதிவாதி 14 ஏ, புட்டா மெஷின் தெருவில் பிறந்ததாக பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளார். பி.சா.ஆ–2 ஆவணத்தில் குழந்தை பிறந்த இடம் சி.டபிள்யூ சி அன்னதானப்பட்டி என்றுள்ளது என்றால் உள்ளது. சி.டபிள்யூ சி என்பது Child Welfare centre என்ற சேலம் மாநகராட்சிக்கு சம்மந்தப்பட்ட மருத்துவமனை என்றால் அது எனக்கு தெரியாது. தற்போது வரை மேற்படி சி.டபிள்யூ சி மருத்துவமனை அதே இடத்தில் செயல்பட்டு வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. ஒரு அதிகாரம் பெற்ற மருத்துவமனையில் பிறந்த 2 ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பி.சா.ஆ–2 பிறப்பு

R VELARAS
Digitally signed by R VELARAS
Date: 2026.07.09 16:26:16 +0530

I Additional District Judge,
Salem

சான்றிதழ் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–30 ஆவணம் 03.06.2025 ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில் வழங்கப்பட்ட மேற்படி உத்தரவு சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவில் அ.வ.எண்.252/2018 வழக்கு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சக்திவேல் ஜெகநாதனின் மகன் என்று அ.வ.எண்.252/2018 வழக்கில் கட்சி செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சக்திவேல் மற்றும் தனம் சேலம் முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் AS.No.29/2023 என்ற மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதில் நான் ஆஜராகி எதிர் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் ஜெகநாதனுக்கு சக்திவேலும், தனமும்தான் வாரிசுகள் என்று கட்சி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு விவரங்களை பற்றி தெரிந்தும் வருவாய் வட்டாட்சியரிடம் பெற்றுள்ள வா.சா.ஆ–30 ஆவணம் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ–4 ஆவணத்தில் வருவாய் கோட்டாட்சியர் எங்கள் இருதரப்பினரையும் நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளும்படி உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கோட்டாட்சியரின் உத்தரவின்படிதான் இவ்வழக்குகள் நடைபெற்று வருகிறது என்றும், ஆனால் அதற்கு புறம்பாக நான் ஆவணங்களை பெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–30 முதல் வா.சா.ஆ–33 வரையிலான ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

**<u>கூடுதல் குறுக்குவிசாரணை</u>**:– (4 ம்பிரதிவாதிகள் தரப்பில்)

இல்லை

**<u>கூடுதல் குறுக்குவிசாரணை</u>**:– (5 ம் பிரதிவாதி தரப்பில்)

R VELARAS Digitally signed by R VELARAS Date: 2026.07.09 16:26:21 +0530

I Additional District Judge,
Salem

2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளின் குறுக்குவிசாரணையை தழுவிக்கொள்கிறார்.

**<u>கூடுதல் குறுக்குவிசாரணை</u>**:– ( 8 முதல் 12 ம் பிரதிவாதிகள் தரப்பில்)

வழக்கு சொத்துகள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி இ வ்வழக்கை தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். எங்கள் தகப்பனாருக்கு வாதிகளாகிய நாங்கள் வாரிசுகள் என்ற முறையில் வழக்கு சொத்தில் உரிமை கோருகிறோம். ஜெகநாதனின் வாரிசுகள் நாங்கள் தான் என்று நீதிமன்றத்தில் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜெகநாதனின் வாரிசுகள் நாங்கள் தான் என்று நீதிமன்றத்தில் வாரிசு சான்றிதழ் பெறாமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R VELARAS

Digitally signed by R VELARAS
Date: 2026.07.09 16:26:27 +0530

I Additional District Judge,
Salem